**த. நா.ச.பே. எண் : 022** **நாள் : 30.08.2016**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110—ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 30.8.2016

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், குறிப்பேடுகள், கையேடுகள், அரசிதழ்கள், அரசு நாட்காட்டிகள் உள்பட அரசுக்குத் தேவையான அனைத்து அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பணியை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

அரசு அச்சகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய இயந்திரம் கொள்முதல் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன், 1923-ஆம் ஆண்டு முதல் உயர்நீதி மன்ற வளாகத்தில் அரசு கிளை அச்சகம் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில், உயர்நீதிமன்றத்தால் நாள்தோறும் வெளியிடப்படும் உயர்நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள், வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்கள், உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்குத் தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு வருகின்றன. இங்கு, தற்போது பயன்பாட்டில் உள்ள “வெப் ஆப்செட்” இயந்திரம் 25 வருடங்களுக்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்ட இயந்திரம் என்பதால், அன்றாடப் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. தினந்தோறும் மாலையில் பெறப்படும் சுமார் 400 பக்கங்கள் கொண்ட வழக்குப் பட்டியலையும், பிற அச்சுப் பணிகளையும் காலதாமதமின்றி, அச்சிட்டு வழங்கிட சென்னையில் உள்ள உயர்நீதி மன்ற கிளை அச்சகத்திற்கு 1 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய வெப் ஆப்செட் இயந்திரம் ஒன்று கொள்முதல் செய்யப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கையால், உயர்நீதிமன்ற அரசு கிளை அச்சகத்தில் அச்சுப் பணிகளை விரைவாகவும், நவீன முறையிலும், நேர்த்தியாகவும், உயர் தரத்திலும் மேற்கொள்ள இயலும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: — இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.